இலங்கை (Sri Lanka)

மீளத்தொடங்கியுள்ள உள்நாட்டு யுத்தம் இலங்கை பத்திரிகையாளர்களுக்கு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தி உள்ளது குறிப்பாக தமிழ் பத்திரிகையாளர்களுக்கு.
2006 ல் ஊடகத்துறைச் சேர்ந்த 7 பேர் கொல்லப்பட்டுள்ளநர்.
துணை இராணுவக்குழுக்களாலும் சிலசமயம் இராணுவத்தாலும் தமிழ் தேசிய வாதத்துக்கு துணை போவதாய் சொல்லி பத்திரிகைகள் தாக்கப்பட்டுள்ளன. மறுபுறம் தமிழ் புலிகள் தமது கொள்கைகளுக்கு எதிரானவர்களை அச்சுறுத்தி உள்ளனர்.

இலங்கைஇராணுவத்திற்கும்தமிழ்புலிகளுக்கும்இடையில்தீவிரமடைந்துவரும் யுத்தம் பல தமிழ் பத்திரிகையாளர்கள் தொழில் செய்யமுடியாத நிலைக்கு அல்லது மறைந்து வாழும் நிலைக்கு தள்ளிவிட்டுள்ளது. கிழக்கு இலஙகையில் பெரும்பாலான தமிழ் ஊடகத்தொடர்பாளர்கள் தமது ஆக்கங்களுக்கு கைஎழுத்திடுவதில்லை. ஒரு ஊடக நிர்வாகி "தமிழ் ஊடகங்களில் புலனாய்வுப்பத்திரிகை துறை இறந்து விட்டது எல்லோரும் சுயதணிக்கை செய்துகொள்கிறார்கள்" என்றும் தானும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி உள்ளதாகவும் கூறுகிறார். தமிழ் பத்திரிகைகளுக்கு எதிராக மேற்கேள்ளப்படும் யுத்தமானது மதிக்கப்படும் பிரபல பத்திரிகையாளர்களையும் பாதித்துள்ளது. August 2006 ல் சுரியன் தனியார் வானொலி நிர்வாகி நடராஜா துருபரன்இனந்தெரியாதநபர்களால்கடத்தப்பட்டுஅச்சுறுத்தப்பட்டபின்மறுநாள் விடுவிக்கப்பட்டார். பின் November 2006 ல் சக்தி தொலைக்கட்சி நிறுவன நிர்வாகி, தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் கொலை சம்மந்தமான செய்திகளை ஒளிபரப்பியதற்காக கொலை மிரட்டலுக்கு உள்ளாகி இருந்தார்.

2006 ல் 3 பத்திரிகையாளர்களும் 4 உதவியாளர்களும் கொலை செய்யப்பட்டிந்தனர். இன்று வரைக்கும் சந்தேகத்திற்கு இடமான எவரும் கைதுசெய்யப்படவில்லை. Januray 2006 ல் தமிழ் நாழிதழ் சுடர் ஒளி (திருகோணமலை) யின் தொடர்பாளர் சுப்ரமனிஜம் சிகிர்தரஜன் கொலை செய்யப்பட்டிருந்தார், சம்பவம் நடந்த முன்தினம் அவர் அப்பகுதி துணை இராணுவக்குளுக்ளின் அத்துமீறல்கள்பற்ரி எழுதியிருந்தார். July 2006 ல் சிங்கள சுதந்திரப்பத்திரிகையாளர் சம்பத் லக்மல் கொழும்பில் கொலை செய்யப்பட்டிருந்தார், அதற்கு அடுத்தமாதம் ஒரு தமிழ் தேசியவாத பத்திரிகையின் ஆசிரியரும் அரசியல்வாதியுமான சின்னத்தம்பி சிவமகராஜா யாழ்ப்பாணத்தில் அவரது வீட்டில் வைத்து கொல்லப்பட்டிருந்தார்.

பத்திரிகையாளர்களின் கொலை விசாரணைகள் குறிப்பாக tamilnet

செய்தித்தள ஆசிரியர் தர்மரத்தினம் சிவராம் அவரதும், 2005 ல் கொல்லப்பட்ட Daily mirror ஆசிரியரதும் விசாரனைகள் அரசாங்கத்தால் தடுக்கப்பட்டுள்ளன. சந்தேகநபர்களில் பலர் விசாரனையாளர்களால் தெளிவாக அடையாளம் காணப்பட்டபின்னும் அவர்கள ் சுதந்திரமாக நடமாடுகிறார்கள்.

கொல்லப்பட்ட பத்தியாளர்கள் பட்டியலில் இடம்பெற்று விடலாம் என்று பயத்தில் ஊடகத்துறையைச்சேர்ந்தவர்கள் பலர் தொழில் செய்வதை நிறுத்திவிட்டனர் அல்லது நாட்டை விட்டு வெளியேறிவிட்டனர். December 2006 ல் புகைப்பட கலைஞ்ஞர் அனுறுட லொகுஅபுரச்ச தமிழ் மக்கள் வடக்கிலும் கிழக்கிலும் படும் அவலங்களை வெளிக்காட்டியதற்காக அச்சுறுத்தப்பட்டதால் இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ளார். சிலதினங்கள் முன் சிங்கள பத்திரிகையாளர் ரோகித பசன அபெயவர்த்தென அச்சம் காரணமாக ஐரோப்பாவுக்கு தப்பி சென்றுள்ளார்.

இராணுவம் தமிழ் புலிகளை பயங்கரவாதிகள் என்றும் புலிகளின் பிரச்சாரத்துக்கு ஊடகங்கள் துணைபோவதாகவும் சொல்லி ஊடகங்களை தாக்கி இருக்கின்றது. October 2006 ல் கிளிநொச்சியில்(புலிகள் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசம்) ஆகாயதாக்குதலால்புலிகளின்குரல்வானெலிகட்டடம்அழிக்கப்பட்டது.இரண்டு ஊளியர்கள் காயத்துக்கு உள்ளானார்கள். பத்திரிகைகழுக்கு இராணுவத்தால் புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. August ல் முதுார் தாக்குதல் நடைபெற்றவேளை இராணுவத்தாலும் புலிகளாலும் பத்திரிகையாளர்கள் அங்கு செல்லவிடாது தடுக்கப்பட்டுள்ளனர். November ல் யாழ்ப்பாணத்தில் இராணுவ தளபதிகள் பத்திரிகையாளர்களை அழைத்து புலிகளிடம் இருந்து வரும் செய்திகளை பிரசுரிக்கவேண்டாம் என கட்டளையிட்டுள்ளனர்.

2006 ல் யாழ்ப்பாணத்தில் பிரசுரமாகும் நாழிதழ் உதயன் தனது 3 ஊழியர்களை இளந்துள்ளது. May ல் 2006 ல் உலக பத்திரிகை சுதந்திரதின (UNESCO) கொண்டாட்டங்கள் கொழும்பில் நடைபெறும் வெளையில் அரச துணைக்குழுவைச்சேர்ந்த சில ஆயுததாரிகள் உதயன் நிலையத்துள் நுளைந்து சுட்டதில் 2 ஊழியர்கள் கொல்லப்பட்டனர். May 1 ல் உதயன், Douglas Devananda (EPDP) தலைவர் )வின் கேலிச்சித்திரம் ஒண்றை பிரசுரித்திருந்தது. சிலகிழமைகளின்பின்ஒருபத்திரிகைவிற்பகர்யாழ்ப்பாணத்தில்இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

August ல் உதயன் நிறுவனத்துக்கு சென்ற ஆயுததாரிகள் சிலர் மாணவர் போராட்ட செய்தியை வெளியிடவேண்டாம் என எச்சரித்து பின அச்சு இயந்திரத்துக்கு தீவைத்து விட்டு சென்றனர். வருட இறுதியில் உதயனுக்கு அச்சுத்தாள் கிடைக்காமல் இராணுவம் தடுத்தது.

கிழக்கில் அரச துணைக்குளுவன கேணல் கருணா குளுவின் கொலை மிரட்டல் காரணமாக பத்திரிகை வினியோகம் கடுமையான தடைகளுக்கு உள்ளாகவேண்டி உள்ளது. பத்திரிகைவினியோகத்தர்கள் பல தடவைகள் வீரகேசரி தினக்குரல் சுடர் ஒளி ஆகிய பத்திரிகைகளை வினியேகிக்க விடாது தடுக்கப்பட்டுள்ளனர்.ஆனால் தினகரன்(அரச பத்திரிகை) ஒருபோதும்˙ தடுக்கப்பட்டதில்லை.

2006 ல் கைது செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை (குறைந்தது 10) குறைவானாலும். Sunday Leader பத்திரிகை ஆசிரியர் லசன்த விக்கிரமதுங்க, இலங்கை ஜனாதிபதிக்காக 3 million euros செலவில் கட்டப்படவிருந்த பதுங்குகுளி சம்மந்தமான செய்தியை வெளியிட்டதிற்காக அரசாங்கம் அவரை கைது செய்ய முற்பட்டது ஆணால் அமரிக்க அரசின் அழுத்தம் காரணமாக பின்வாங்கிகொண்டது.

மிகவும் விமர்சனத்துக்கு உள்ளாகி உள்ள ஜனாதிபதி மகிந்த இரஜபக்சே அரசாங்கம் ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகளை அதிகரித்துள்ளது. அதிக சுதந்திரமாக செய்திகளை வெளியிட்டதற்காக குறைந்தது 2 பத்திரிகை ஆசிரியர்கள் ( ரஜ்பல் அபெனாயக director of Sunday Observer உட்பட) பதவி விலக்கம் செய்யப்பட்டுள்ளனர். இனப்பிரச்சினையைபற்றி அதிக சுதந்திரமாக பேசியதற்காக 2 வானெலி நிகழ்சிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. சுயதய கஅ பாலியல்ரீதியான நிகழ்சி ஒலிபரப்பியதற்காக அரசால் தடை செய்யப்பட்டுள்ளது

இறுதியாக தனியார் ஊடகங்கள் புலிகளுக்கு சார்பான செய்திகளை வெளியிடுவதாக குற்ரம் சாட்டப்பட்டு JVP சார்பான இனவாத சிங்கள பத்திரிகைகளின் பிரச்சார தாக்கத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளன . இணையத்தளத்தில் புலிகளுக்கு சார்பானவர்களாலும், எதிரானவர்களாலும் சுதந்திர ஊடகங்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகிஉள்ளன. தமிழ்,சிங்கள BBC சேவை இருசாராலும் தொடர்ந்து அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.